Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines) 4372900 (4 Lines) 99526 02900 95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 71 | உள்ளூர் - 12.03.2026 | வியாழன் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 71 | வெளியூர் - 13.03.2026 | வெள்ளி | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

தேசிய மாணவர் படை (தமிழ்நாடு) காலியிடங்கள்!

பிறந்த தேதிக்கு பொருத்தமான அதிர்ஷ்ட பொருட்கள்?

விஜய்யின் புதிய அரசியல் பார்முலா!

ஹன்சிகாவுக்கு விவாகரத்து.. ஜீவனாம்சம் கிடையாது!

## தமிழக பொறுப்பு ஆளுநராக அர்லேகர் பதவியேற்றார்!



புதுடெல்லி, மார்ச். 12–

மேற்கு வங்க ஆளுநர் சி.வி. ஆனந்த போஸ் தனது பதவியை ராஜினாமா செய்ததை அடுத்து, அம்மாநிலத்தின் ஆளுநராக ஆர். என். ரவியும், தமிழ்நாட்டின் பொறுப்பு ஆளுநராக கேரள ஆளுநர் ஆர்.வி. ஆர்லேகர் நியமனம் செய்யப்பட்டனர்.

இந்நிலையில் கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் நடந்த பதவியேற்பு விழாவில் கேரள மாநில ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் தமிழ்நாட்டின் பொறுப்பு ஆளுநராக பதவியேற்றுக்கொண்டார்.

உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி பொறுப்பு ஆளுநராக அர்லேகருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். பதவியேற்பு விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்றார்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் 'தமிழரசு' சார்பில் தயாரிக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் ஐந்து ஆண்டு கால சாதனைகளை விளக்கும் ''மக்கள் பணியில் மகத்தான 5 ஆண்டுகள் (2021–26)'' சாதனை மலரினை வெளியிட்டார். இந்நிகழ்வின்போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் ம.சு. சண்முகம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இயக்குநர் (பொறுப்பு) ரெ. கோமகன் உடனிருந்தனர்.

## இது போன்றதொரு தாக்குதலை ஈரான் சற்றும் எதிர்பார்க்கவில்லை: சொல்கிறார் அதிபர் டிரம்ப்

வாஷிங்டன், மார்ச். 12–

''வரலாற்றில் இதுவரை தாக்கிய எந்த நாட்டையும் விட ஈரான் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது '' என அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இது குறித்து வெள்ளை மாளிகையில் நிருபர்களிடம் அதிபர் டிரம்ப் கூறியதாவது: கடந்த 11 நாட்களில், அமெரிக்க ராணுவம் ஈரானை ஏறக்குறைய அழித்துவிட்டது. அது ஒரு கடினமான நாடு. அவர்களின் விமானப்படை முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு விட்டது. அதற்கு மூன்று மணி நேரத்திற்கும் அதிகமான நேரம் ஆனது.

அவர்களிடம் இப்போது ரேடார் வசதி இல்லை. அவர்களிடம் விமான எதிர்ப்புத் தளவாடங்கள் இல்லை. அவர்களிடம் இப்போது எதுவுமே இல்லை. அவர்களின் ஏவுகணைத் திறன் 90% குறைந்துவிட்டது. அவர்களின் ட்ரோன்கள் 85% குறைந்துவிட்டன. அவை தயாரிக்கப்படும் தொழிற்சாலைகளை நாங்கள் எல்லா இடங்களிலும் குண்டுவீசித் தகர்த்து வருகிறோம்.



**கண்ணி வெடிகள்**

நீங்கள் இப்போது காண்பது போன்ற ஒன்றை இதற்கு முன் யாரும் கண்டதில்லை. அவர்களிடம் இப்போது அணுசக்தித் திறன் ஏதுமில்லை. 'மிட்நைட் ஹேமர்' நடவடிக்கைக்குப் பிறகு, நாங்கள் அங்கிருந்து வெளியேறினோம்.

அதுவே அவர்களைச் சிறிது காலத்திற்கு முடக்கிவிடும் என்று நாங்கள் கருதினோம். ஆனால் அவர்கள் மீண்டும் தங்கள் நடவடிக்கைகளைத் தொடங்கினர். அதனால்தான் நாம் இப்போது அதை முழுமையாக முடித்துவைக்க வேண்டியுள்ளது. எனது நிர்வாகம் உலகம் முழுவதும் எண்ணெய் விநியோகம் தடையின்றி நடைபெறுவதை உறுதிசெய்யும் பணியிலும் ஈடுபட்டு வருகிறது. நாங்கள் சில இலக்குகளைத் தகர்த்தோம். அவர்கள் கடலில் கண்ணி வெடிகளைப் பதிக்க விரும்பினார்கள். படகுகளைத் தகர்ப்பதற்காகவே அந்தக் கண்ணிவெடிகளைப் பதிக்க முயன்றார்கள்.

இரண்டு நாட்களில் அவர்கள் 54 கப்பல்களைச் செயலிழக்கச் செய்தார்கள். இன்று சர்வதேச எரிசக்தி முகமை ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை வெளியிட்டது என்பதைத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்; உலகின் பல்வேறு நாடுகளின் பெட்ரோலியக் கிடங்குகளிலிருந்து, இதுவரை இல்லாத அளவாக 400 மில்லியன் பீப்பாய்கள் கச்சா எண்ணெயை விடுவிப்பதை ஒப்புக்கொண்டுள்ளது.

அமெரிக்காவிற்கும் உலகிற்கும் அச்சுறுத்தலாக விளங்கும் இந்த ஆபத்தை நாம் முடிவுக்குக் கொண்டுவரும் வேளையில், இந்த நடவடிக்கை எண்ணெய் விலைகளை கணிசமாகக் குறைக்கும். ஈரானில் உள்ள பயங்கரவாத ஆட்சியால் ஏற்படும் அச்சுறுத்தலைத் தடுத்து நிறுத்த, 'ஆபரேஷன் எபிக் ப்யூரி' (Operation Epic Fury) எனும் பெயரில் நாங்கள் ஒரு தீர்க்கமான நடவடிக்கையை மேற்கொண்டோம்.


47 ஆண்டுகளுக்கு...!

அது ஒரு அற்புதமான பெயர், இல்லையா? சரி, நீங்கள் வெற்றி பெற்றால் மட்டுமே அந்தப் பெயர் அர்த்தமுள்ளதாக இருக்கும். மிகவும் கொடூரமான சில மனிதர்களை ஒழித்துக் கட்டுவதற்காக நாங்கள் இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இந்த நடவடிக்கை 47 ஆண்டுகளுக்கு முன்பே மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

கடந்த 47 ஆண்டுகளாக அவர்கள் எங்கள் மக்களைக் கொன்று குவித்தனர். அவர்கள் ஒட்டுமொத்த மத்திய கிழக்குப் பகுதியையும் தங்கள் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர அவர்கள் திட்டமிட்டிருந்தார்கள். இதனால் அமெரிக்க ராணுவத்தின் தாக்குதலுக்கு அவர்கள் ஆளானார்கள். இது போன்றதொரு தாக்குதலை அவர்கள் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை. இவ்வாறு அதிபர் டிரம்ப் கூறினார்.

## வளைகுடா போர்:
# எரிபொருள் தட்டுப்பாடு! 5 மாநில தேர்தல்கள்
## தள்ளிப் போகுமா?

புதுடெல்லி, மார்ச். 12–






தமிழ்நாடு, கேரளம், மேற்கு வங்கம், அஸ்ஸாம், புதுவை ஆகிய ஐந்து மாநிலங்களின் சட்டப்பேரவைகளுக்குக் குறிப்பிட்ட காலத்தில் தேர்தல்களை நடத்த முடியுமா? நடைபெறுமா?

அமெரிக்கா இஸ்ரேல் – ஈரான் போர் காரணமாக உலகின் பெரும்பாலான நாடுகள் பல்வேறு பொருளாதாரச் சிக்கலில் தவிக்கின்றன.

வளைகுடா நாடுகளில் எண்ணெய்த் துரப்பணப் பணிகள் முடங்கிப் போய்விட்டன. குவைத், இராக், சௌதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் போன்றவை எண்ணெய் உற்பத்தியைக் குறைத்துவிட்டன. கச்சா எண்ணெய் விலையோ கண்மண் தெரியாமல் அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

வளைகுடா நாடுகளிலிருந்து பிற நாடுகளுக்கு எரிபொருள் மற்றும் எரிவாயு கொண்டுசெல்லும் கடல்வழியான ஹோர்முஸ் நீரிணையின் பெரும்பகுதி ஈரானின் கட்டுப்பாட்டில் இருக்கிற நிலையில் ஏற்றுமதியும் இறக்குமதியும் தடைப்பட்டுவிட்டது.

இந்தப் போரின் பாதிப்புகளை உலகின் பெரும்பாலான நாடுகள் உணரத் தொடங்கிவிட்டன. எரிபொருளுக்கு ஹோர்முஸ் நீரிணை வழியை நம்பியுள்ள ஆசிய நாடுகள் பெரும் சிக்கலைச் சந்திக்கத் தொடங்கியுள்ளன.

அரசு ஊழியர்களை வீட்டிலிருந்தே வேலை பார்க்கச் சொல்லிவிட்டது தாய்லாந்து. வாரத்துக்கு நான்கு நாள் வேலை என்றாக்கிவிட்டது பிலிப்பின்ஸ். தனி வாகனப் பயன்பாட்டை நிறுத்தி, பொதுப் போக்குவரத்துக்கு அறிவுறுத்தியிருக்கிறது வியத்நாம். இலங்கையில் எரிபொருள் விலைகள் உயர்த்தப்பட்டு விட்டன. தாய்வானிலும் அதே. பாகிஸ்தானில் இரு வாரங்களுக்குப் பள்ளிகள் விடுமுறை. சிக்கன நடவடிக்கைகள்.

கண்ணுக்கு எட்டிய வரையில் போர் நிறுத்தம் தெரியாத நிலையில், ஒவ்வொரு நாடாக எரிபொருள் பற்றாக்குறையை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளைத் தொடங்கிவிட்டன.

இந்தியாவில்... நாடு முழுவதும் அத்தியாவசிய சேவைகள் தவிர்த்த வணிக பயன்பாட்டுக்கான எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம் நிறுத்தப்பட்டுவிட்டது. பெருநகரங்களில் உணவகங்கள் மூடப்படுகின்றன. எரிவாயு தட்டுப்பாடு காரணமாக வாகனங்களும் சிக்கலில் மாட்டியிருக்கின்றன. வீட்டு உபயோக சிலிண்டர்கள் விநியோகம் பராமரிக்கப்படும் என்று அரசுத் தரப்பில் சொல்லப்பட்டாலும் பல இடங்களில் சிலிண்டர் வேண்டிப் பதிவுகூட செய்ய முடியவில்லை எனப் புகார்கள். சமையல் எரிவாயு இல்லாமல் வீட்டுச் சமையலை நினைத்தும் பார்க்க முடியாது. நிலைமை இதே வேகத்தில் தொடர்ந்தால் உணவகங்கள், தங்குமிடங்கள் அடுத்தடுத்து மூடப்படும். பள்ளி, கல்லூரி விடுதிகள், அலுவலக கேன்டீன்கள் உள்பட அனைத்தும் மூடப்பட நேரிடும்.

அடுத்து, பெட்ரோல், டீசலுக்கும் பற்றாக்குறை / தட்டுப்பாடு தொடங்கினால், இரு சக்கர, நான்கு சக்கர வாகனங்களும் ஓய்வெடுக்க வேண்டியிருக்கும். மக்கள் அனைவரும் பொதுப் போக்குவரத்தை மட்டுமே நம்பியிருக்க வேண்டியிருக்கும். ஒருகட்டத்தில் பொதுப் போக்குவரத்தும் முடங்கும். சொல்லப் போனால், ஒரு மினி கரோனா காலமாக மாறிவிடக் கூடும்.

தமிழ்நாடு சட்டப்பேரவையின் ஆயுள்காலம் வரும் மே மாதம் 10 ஆம் தேதியுடன் முடிவு பெறுகிறது. மேற்கு வங்க பேரவையின் பதவிக் காலம் மே 7 ஆம் தேதியுடனும் அஸ்ஸாம் பேரவைக் காலம் மே 20 ஆம் தேதியுடனும் கேரளத்தின் பேரவைக் காலம் மே 23 ஆம் தேதியுடனும் புதுவை பேரவையின் ஆயுள் காலம் ஜூன் 20 ஆம் தேதியுடனும் முடிவுக்கு வருகிறது.

இந்த மாநிலங்களில் குறிப்பிட்ட தேதிகளுக்குள்ளாக சட்டப்பேரவைகளுக்குத் தேர்தல் நடத்தப்பட்டுப் புதிய அமைச்சரவைகள் பொறுப்பேற்க வேண்டும். இதுதொடர்பான, தேர்தல் அறிவிக்கைகள் விரைவில் வெளியிடப்பட்டு, தேர்தல் செயற்பாடுகள் தொடங்கும் என எதிர்பார்த்துக் கொண்டிருந்த நிலையில்தான் வளைகுடா போரின் பக்க விளைவாக எரிபொருள் தட்டுப்பாட்டுப் பூதம் புறப்பட்டிருக்கிறது. இந்த மெகா பிரச்சினை முடிவுக்கு வராத வரையில் அரசுகளும் மக்களும் மிக மோசமான வாழ்க்கைச் சூழலை எதிர்கொள்ள வேண்டிய நெருக்கடியில் இருக்கும்போது, இந்த மாநிலங்களுக்கு சட்டப்பேரவைத் தேர்தல்களை அறிவிப்பதும் சுமுகமாக நடத்தி முடிப்பதும் அவ்வளவு எளிதான ஒன்றாக இருக்க வாய்ப்பில்லை.

இரு, நான்கு சக்கர வாகனங்கள் ஓடவில்லை, உணவகங்கள், விடுதிகள் எல்லாம் மூடப்பட்டு விட்டன; பொதுப் போக்குவரத்தே திணறத் தொடங்கியிருக்கிறது... ...என்ற சூழலில் தேர்தல்களை நடத்துவது மட்டும் எவ்வாறு சாத்தியம்?

கடந்த இரு நாள்களாக எரிபொருள் – எரிவாயு தட்டுப்பாட்டுப் பிரச்சினையை நாடு நேரடியாக உணரத் தொடங்கிவிட்ட நிலையில், அனேகமாக தேர்தல் ஆணையமும் இதுபற்றிச் சிந்திக்கத் தொடங்கிவிட்டிருக்கக் கூடும்.

உண்மையாக இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. என்றாலும் கொஞ்சம் அரசியலாக யோசித்துப் பார்த்தால் தமிழ்நாட்டில் ஆளும் திமுக கூட்டணியில்தான் பரபரப்பாகக் கூட்டணியை இறுதி செய்து தொகுதிப் பங்கீடு பற்றியெல்லாம் பேசி முடிவு செய்துகொண்டிருக்கிறார்கள்.

எதிர்த்துப் போட்டியிடுகிற – மத்தியில் ஆளும் – தேசிய ஜனநாயகக் கூட்டணியைப் பொருத்தவரை மிகவும் 'கூலாக' ரொம்பவும் அலட்டிக் கொள்ளாமல் இருப்பதைப் போலவே தோன்றுகிறது. இன்னமும் தொகுதிப் பங்கீடு பற்றியெல்லாம் பேசியதாகத் தெரியவில்லை. எனினும், பிரதமர் நரேந்திர மோடி மட்டும் மூன்றாவது முறையாகத் தேர்தல் பிரசாரத்துக்காகத் தமிழ்நாட்டுக்கு ( 11.03.2026)வந்து சென்றிருக்கிறார்.

இந்தச் சூழலையே காரணமாகக் கொண்டு, இந்த மாநிலங்களின் சட்டப்பேரவைகளுடைய ஆயுள் காலம் முடிந்தவுடன் இடைக்கால அரசுகளாக இவர்களையே, தேர்தல் முடிந்து புதிய அரசு பொறுப்பேற்கும் வரை, நீடிக்கச் செய்யலாம். அல்லது இதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி, இந்த மாநிலங்களில் குடியரசுத் தலைவர் ஆட்சியை நடைமுறைப்படுத்திவிட்டு, நிலைமை சுமுகமானதும் சட்டப்பேரவைத் தேர்தலை நடத்திப் புதிய அரசை மக்கள் தேர்ந்தெடுக்க வகை செய்யலாம்! அல்லது என்ன வந்தாலும் சமாளித்துக் கொள்ளலாம் என்று தேர்தலையும் அறிவிக்கலாம்! என்ன செய்யக் காத்திருக்கிறதோ தேர்தல் ஆணையம்?



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலமாக மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவ துறையில் (Obstetrics & Gynaecology) 182 சிறப்பு மருத்துவர்களும், கதிரியக்கவியல் (Radiology) துறையில் 37 சிறப்பு மருத்துவர்களும், தடயவியல் மருத்துவத் துறையில் (Forensic Medicine) 24 சிறப்பு மருத்துவர்களும், முதியோர் மருத்துவத் துறையில் (Geriatrics) 6 சிறப்பு மருத்துவர்களும், இருதய அறுவை சிகிச்சை துறையில் (Cardio–Thoracic Surgery) 1 சிறப்பு மருத்துவரும், என மொத்தம் 250 சிறப்பு மருத்துவர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

# தலையங்கம் மதுரை மணி

வியாழக்கிழமை 12.03.2026
விசுவாவசு தமிழ் வருடம்
மாசி மாதம் 28-ம் தேதி

## சிலிண்டர் தட்டுப்பாட்டில் சிக்காம இருக்கனுமா?



எல்பிஜி சிலிண்டர் தட்டுப்பாடு இந்தியா முழுவதும் கோடி கணக்கான மக்களை நேரடியாகவே பாதிப்படைய வைத்திருக்கிறது. ஒருபுறம் சிலிண்டர்கள் கிடைக்காமல் உணவகங்கள் மூடப்பட்டு விட்டன, மற்றொருபுறம் வீடுகளுக்கு சிலிண்டர் புக் செய்து இன்னும் டெலிவரி கிடைக்கவில்லை என மக்கள் கேஸ் ஏஜென்சிகளை நோக்கி படையெடுத்த வண்ணம் இருக்கின்றனர்.

வீட்டு உபயோகத்திற்கு தற்போது சிலிண்டர் இருந்தாலும் அது விரைவில் காலியாகிவிடும், புக் செய்தும் சிலிண்டர் கிடைக்காமல் போனால் என்ன செய்வது என்ற அச்சம் லட்சக்கணக்கான இல்லத்தரசிகளிடம் ஆட்கொண்டிருக்கிறது. எப்போது ஈரான் போர் முடிந்து எல்பிஜி விநியோகம் சீராகும் என்பது தெரியவில்லை, எப்போது இந்த தட்டுப்பாடு சரியாகும் என்பதும் கணிக்கமுடியவில்லை. கேஸ் சிலிண்டர் தட்டுப்பாடு நேரடியாக நம் வீட்டு சமையலறை வரை வந்துவிட்ட சூழலில் வரும் முன் காப்பது தான் சிறந்தது.

உலக மக்கள் தொகையில் முதலிடத்தில் இருக்கக்கூடிய இந்தியா தன்னுடைய அத்தியாவசிய பொருளான எல்பிஜி, பெட்ரோல், டீசல் உள்ளிட்ட அனைத்திற்குமே வெளிநாடுகளை தான் பெரிய அளவில் சார்ந்து இருக்கிறது. இந்தியாவுக்கு தேவையான எல்பிஜி மற்றும் கச்சா எண்ணெய் உள்ளிட்டவற்றில் 60 சதவீதத்திற்கும் மேல் வளைகுடா நாடுகளில் இருந்து தான் வாங்கப்படுகிறது. பத்து நாட்களுக்கு மேலாக வளைகுடா நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு கச்சா எண்ணெய் மற்றும் எல்பிஜி வரவே இல்லை. இதன் காரணமாக உள்நாட்டில் கடுமையான எல்பிஜி தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

முதலில் ஹோட்டல்களுக்கு சிலிண்டர் விநியோகம் நிறுத்தப்பட்டிருக்கிறது, அடுத்த கட்டமாக வீடுகளுக்கும் இதே நிலை வந்துவிடுமோ என்ற அச்சம் மக்களிடையே ஏற்பட்டிருக்கிறது. எனவே திடீரென கேஸ் தீர்ந்து விட்டு சிலிண்டர் கிடைக்காமல் அல்லாடுவதை விட இருக்கக்கூடிய கேஸை சிக்கனமாக பயன்படுத்தி அதனை நீண்ட நாட்கள் பயன்பாட்டுக்கு உரியதாக மாற்றிக் கொள்வது வீட்டுக்கும் நாட்டுக்கும் நல்லது. சிலிண்டருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்க கூடிய சூழலில் பொதுமக்கள் தங்களுடைய வீடுகளில் எப்படி எல்லாம் கேஸ் சிலிண்டர் பயன்பாட்டை மிச்சப்படுத்தலாம் ?

பொது மக்கள் வீடுகளில் கேஸ் அடுப்பு இருந்தாலும் மின்சாரத்தில் இயங்கும் இண்டக்ஷன் அடுப்பையும் வாங்கி வைத்துக் கொள்வது நல்லது. அவசர காலங்களில் இது உங்களுக்கு கை கொடுக்கும். சுடுதண்ணி வைக்க வேண்டும், உணவு பொருட்களை சூடு படுத்துவது, டீ, காபி போடுவது போன்றவற்றுக்கு கேஸ் அடுப்புக்கு மாற்றாக இண்டக்ஷன் அடுப்புகளை பயன்படுத்திக் கொள்ளலாம்.

மேலும் முடிந்தவரை உணவுகளை குக்கரில் சமைக்க வேண்டும். சாதம் வைப்பது, பருப்பு வேக வைப்பது போன்றவற்றுக்கு சாதாரண பாத்திரங்களை விட குக்கரில் வைக்கும் போது 20 லிருந்து 30 சதவீதமரை கேஸ் பயன்பாட்டை மிச்சப்படுத்த முடியும்.

அடுத்ததாக பாத்திரங்களை தாண்டி வெளியே வராதபடி அடுப்பு எரிவதை உறுதி செய்ய வேண்டும். பாத்திரத்திற்கு வெளியே வர வரும் நெருப்பால் கேஸ் தான் வீணாகுமே தவிர விரைவாக சமைக்க முடியாது. அதே போல பாத்திரங்களை மூடி வைத்து சமைப்பதன் மூலம் உணவு வேகமாக சமைக்க முடியும் இதனால் கேஸ் பயன்பாட்டை சிக்கனப்படுத்தலாம்.

தற்போது கெட்டில்கள் சந்தைகளில் கிடைக்கின்றன. குடிக்க தண்ணீர் சூடு செய்வதற்கு கேஸ் அடுப்புக்கு பதில் கெட்டில்களை பயன்படுத்தலாம். குளிக்க சுடு தண்ணீர் வைக்க இண்டக்ஷன் அடுப்பினை பயன்படுத்தலாம்.

சமீப காலமாக NO FIRE COOKING என்ற கான்செப்ட் மக்களிடையே வேகமாக பரவி வருகிறது. அதாவது அடுப்பே பற்ற வைக்காமல் உணவு சமைத்து உண்பது. இது சம்பந்தப்பட்ட ஏராளமான வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் கிடைக்கின்றன. ருசியான பல்வேறு உணவு வகைகள் இதில் பகிரப்படுகின்றன. எனவே பொதுமக்கள் தங்களுடைய உணவில் ஒரு வேளைக்கு NO FIRE COOKING உணவு முறைக்கு மாற்றிக் கொள்ளலாம் இது உங்களுடைய உடலுக்கும் ஆரோக்கியம் தரக்கூடியது.



தேனி மாவட்டத்தில் 199 பள்ளிகளை சேர்ந்த 14,245 மாணவ, மாணவிகள்10ஆம் வகுப்பு பொது தேர்வினை 69 தேர்வு மையங்களில் நேற்று எழுதினர். தேனி தனியார் பள்ளியில் உள்ள தேர்வு மையத்தை மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜித்சிங் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# 22-வது தவணை வருகிறது: அதற்கு முன்... முக்கிய தகவலை பகிர்ந்த வேளாண் அமைச்சர்!




சென்னை, மார்ச். 12–

மார்ச் 13 ஆம் தேதி,பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதி திட்டத்தின் அடுத்த தவணை வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னதாக, விவசாயிகளுக்கு மத்திய அரசு ஒரு முக்கியமான வேண்டுகோளை விடுத்துள்ளது.

மார்ச் 13 ஆம் தேதி வெளியிடப்படவுள்ள 22வது தவணை தங்களது கணக்குகளை சரியான நேரத்தில் சென்றடையும் வகையில், அனைத்து பயனாளி விவசாயிகளும் பிரதமர் கிசான் போர்ட்டலில் தங்கள் தகவல்களை சரிபார்த்து, e–KYC –ஐ விரைவில் நிரப்ப வேண்டும் என்று அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

**பிஎம் கிசான் 22வது தவணை எப்போது கிடைக்கும்?**

மார்ச் 13 ஆம் தேதி அரசாங்கம் ₹18,640 கோடி மதிப்பிலான 22வது தவணையை வெளியிடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரதமர் நரேந்திர மோடி இந்த திட்டத்தின் கீழ் அசாமின் குவஹாத்தியில் இருந்து 9.32 கோடி பதிவுசெய்யப்பட்ட விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக 22வது தவணைக்கான பணத்தை மாற்றுவார்.

நாடு முழுவதும் உள்ள விவசாயிகள், தங்கள் தகவல்களை விரைவில் புதுப்பிக்கு மாறு வேளாண் அமைச்சர் சிவராஜ் சிங் சௌஹான் வேண்டுகோள் விடுத்துள்ளார். 'e–KYC அல்லது பிற தகவல்கள் முழுமை யடையவில்லை என்றால், தவணையைப் பெறுவதில் ஏதேனும் சிக்கல்கள் ஏற்படலாம். ஆகையால், அதை உடனடியாக அதை நிரப்பவும்.' என்று அவர் கூறியுள்ளார்.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஆண்டவர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற ஆதி தமிழர் சமூக நீதிப் பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் தலித் சுப்பிரமணியன் இல்ல திருமண வரவேற்பு விழாவில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பங்கேற்று மணமக்களை ஆசீர்வதித்தார். இவ்விழாவில் தோழமைக் கட்சி நண்பர்களும் கூட்டணி கட்சியின் நிர்வாகிகளும் மற்றும் ஊர் பொதுமக்களும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

# இண்டேன் வாடிக்கையாளர்களே!! சிலிண்டர் புக் செய்ய புதிய எண்கள், வழிமுறைகள் அறிவிப்பு!!

சென்னை, மார்ச். 12–

நாடு முழுவதுமே எல்பிஜி தட்டுப்பாடு ஏற்பட்டிருக்க கூடிய சூழலில் வீட்டு உபயோக சிலிண்டர்களும் தங்களுக்கு கிடைக்காமல் போய்விடுமோ என்றால் அச்சம் அதிகமான மக்களை ஆட்கொண்டு இருக்கிறது. வணிக பயன்பாட்டு சிலிண்டர் விநியோகம் நிறுத்தப்பட்டு இருக்கக்கூடிய நிலையில் வீட்ட உபயோக சிலிண்டரும் இதேபோல நிறுத்தப்பட்டால் என்ன செய்வது என பதற்றம் அடைந்துள்ள மக்கள் கூடுதலாக சிலிண்டர் வாங்கி வைத்துக் கொள்வோம் என அதிகமாக புக்கிங் செய்ய தொடங்கியிருக்கின்றனர்.





சிலிண்டர் புக்கிங் செய்வதற்கான அழைப்புகள் வழக்கத்தை விட அதிகரித்திருப்பதால் இண்டேன் நிறுவனத்தின் கேஸ் புக்கிங் சிஸ்டமே செயல்படாமல் நின்று போய்விட்டது. வழக்கத்தை விட 10 மடங்கு அதிகமாக அழைப்புகள் வந்ததால் தங்கள் நிறுவனத்தில் சிலிண்டர் புக்கிங் அமைப்பே கிராஸ் ஆகிவிட்டது என இண்டேன் நிறுவனம் தெரிவித்திருக்கிறது. இது தொடர்பாக அனைத்து விநியோகஸ்தர்களுக்கும் இண்டேன் நிறுவனம் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் தற்போது எதிர்பாராத சவாலான சூழலில் நாம் எதிர்கொண்டிருக்கிறோம் , ஐவிஆர்எஸ் மற்றும் மிஸ்டு கால் நம்பர்கள் மூலம் சிலிண்டர் முன்பதிவு செய்வது வழக்கத்தைவிட பத்து மடங்கு அதிகரித்து இருக்கிறது என கூறியிருக்கிறது.

இதன் காரணமாக சிலிண்டர் முன்பதிவு செய்வதற்கான நம்முடைய இந்த ஐவிஆர்எஸ் அமைப்பே அதிக சுமை ஏற்பட்டு கிராஸ் ஆகி இருக்கிறது என கூறியுள்ளது. எனவே ஐவிஆர்எஸ் மற்றும் மிஸ்டு கால் முறையில் சிலிண்டர் முன்பதிவு செய்ய முடியாத வாடிக்கையாளர்கள் பின்வரும் வழிமுறைகளை பின்பற்றலாம் என தெரிவித்திருக்கிறது.

ஏராளமான வாடிக்கையாளர்கள் வழக்கமாக சிலிண்டர் முன்பதிவு செய்யக்கூடிய தொலைபேசி எண்கள் வேலை செய்யவில்லை என தொடர்ச்சியாக புகார் கூறி வந்ததை அடுத்து இண்டேன் நிறுவனம் இந்த அறிவிப்பினை வெளியிட்டு இருக்கிறது.

இதன்படி உங்களுடைய பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணிலிருந்து 75888 88824 எண்ணிற்கு whatsapp மூலம் 'REFILL' என டைப் செய்து மெசேஜ் அனுப்பினால் உடனடியாக உங்களுக்கான சிலிண்டர் புக்கிங் செய்யப்படும். அல்லது INDIAN OIL ONE என்ற செயலியை பதிவிறக்கம் செய்து உங்களுடைய கஸ்டமர் எண்ணை உள்ளிட்டு அதன் மூலமாக சிலிண்டர் முன்பதிவு செய்து கொள்ளலாம்.




பழனி மாரியம்மனுக்கு வ.உ.சி. மன்றம் சார்பாக, அன்னாபிஷேகம் நடைபெற்றது. இதில் உபயதாரர் சித்தநாதன் சன்ஸ் எஸ்.ஜி.தனசேகர், எஸ்.ஜி.பழனிவேல் ஆகியோருக்கு கோவில் சார்பில் பரிவட்டம் கட்டி மாலை மரியாதை நடைபெற்றது.

# தமிழ்நாடு பிராமண சமாஜம் தலைவராக என்.ஹரிஹரமுத்து பொறுப்பேற்றார்!



பழனி, மார்ச். 12–

பழனியில் தமிழ்நாடு பிராமண சமாஜசத்தின் 2026 மற்றும் 2029 ஆம் ஆண்டுக்கான நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. இதில் மாநில தலைவராக பழனி கண்பத் கிரேண்ட் ஹோட்டல் அதிபர் என் ஹரிஹரமுத்து, மீண்டும் தேர்வு செய்யப்பட்டார். அவருக்கு அதற்கான சான்றிதழை தேர்தல் அலுவலர் வழக்கறிஞர் அனிருத் கர்கா வழங்கினார். அதேபோல் செயலாளராக ரமேஷ்குமாரும், பொருளாளராக வைத்தியநாதன் தேர்வு செய்யப்பட்டனர். மேலும் நிர்வாக குழு பொறுப்பாளராக 68 பேர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.



# உங்கள் பிறந்த தேதிக்கு பொருத்தமான அதிர்ஷ்ட பொருட்கள் ?

குறிப்புகள் படி நம் வாழ்க்கையில் நாம் காணும் எண்கள், கடந்துச் செல்லும் எண்கள் அனைத்தும் நமக்கான ஒரு தனித்துவ செய்தியை கொண்டு வருகிறது. குறிப்பாக, பிறந்த தேதியின் அடிப்படையில் நாம் பெறும் எண் கணித எண்கள். நம் வாழ்க்கை பலன்களை கணிக்கவும், எதிர்காலத்தை புரிந்துக் கொள்ளவும் இது உதவி செய்கிறது. மேலும், தனி நபரின் வாழ்க்கையில் நேர்மறை ஆற்றலை கொண்டு வரும் பரிகாரங்களையும் இந்த எண்கள் பரிந்துரை செய்கின்றன!


எண் கணிதத்தில் ரேடிக்ஸ் எண் எனப்படுவது, நம் பிறந்த தேதியின் கூட்டுத்தொகையில் கிடைக்கும் இறுதி ஒற்றை இலக்க எண் ஆகும். தனி நபரின் குணாதிசயங்களை பிரதிபலிக்கும் இந்த ரேடிக்ஸ் எண்கள், எண்ணுக்கு உரியவரின் மகிழ்ச்சியான வாழ்வுக்கு வழி காண உதவும் பரிகாரங்களையும் அளிக்கிறது. அந்த வரிசையில் உங்கள் எண்ணிற்கான பரிகாரம் என்ன? குறிப்பாக, உங்களுடன் நீங்கள் எப்போதும் வைத்திருக்க வேண்டிய பொருள் என்ன? என்பது குறித்து காணலாம்!

**ரேடிக்ஸ் எண் 1 – செம்பு நாணயம்!**




எந்த ஒரு மாதத்திலும் 1, 10, 19, 28 ஆகிய தேதிகளில் பிறந்தவர்கள் ரேடிக்ஸ் எண் 1 பெறுகின்றனர். ரேடிக்ஸ் எண் 1 கொண்டவர்கள் சூரியனை அதிபதியாக கொண்டவர்கள், ஆளுமை பண்புகளுக்கு பெயர் பெற்றவர்கள். எண் கணித குறிப்புகள் படி இவர்கள் தங்கள் உடன் எப்போதும் ஒரு செம்பு நாணயம் வைத்திருப்பது சிறந்தது. சூரியனுக்கு உகந்த உலோகமான இந்த செம்பு நாணயம், செல்வத்தை ஈர்க்க உதவி செய்கிறது. எதிர்மறை ஆற்றலை குறைத்து, நேர்மறை ஆற்றலை அதிகரிக்கிறது!

**ரேடிக்ஸ் எண் 2 – வெள்ளி நாணயம்!**



2, 11, 20, 29 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு ரேடிக்ஸ் எண் 2 வழங்கப்படுகிறது. ரேடிக்ஸ் எண் 2 கொண்டவர்கள் சந்திரனை ஆளும் அதிபதியாக கொண்டுள்ளனர் – சந்திரனுடன் தொடர்புடைய உலோகமாக வெள்ளி நாணயம் பார்க்கப்படுகிறது. அந்த வகையில் உங்கள் உடன் எப்போதும் ஒரு வெள்ளி நாணயம் வைத்திருப்பது, பண வரவை சீராக்கும் – கடன் பிரச்சனைகளில் இருந்து விடுபட உதவியாக இருக்கும். மேலும், எதிர்பாராத செலவுகளை தவிர்க்கவும் உதவியாக இருக்கும்.

**ரேடிக்ஸ் எண் 3 – மஞ்சள் நிற கைக்குட்டை!**




குரு பகவானுடன் தொடர்பு கொண்ட ஒரு எண்ணாக எண் 3 பார்க்கப்படுகிறது. வேத ஜோதிடத்தில் குரு ஞானம், செழிப்பு, செல்வாக்கை பிரதிபலிக்கும் ஒரு கிரகம் ஆகும். குரு பகவானின் ஆற்றலுடன் தொடர்பு கொண்ட ரேடிக்ஸ் எண் 3 கொண்டவர்கள், தங்கள் உடன் எப்போதும் ஒரு மஞ்சள் நிற கைக்குட்டை அல்லது வெள்ளை நிற கைக்குட்டை வைத்திருப்பது நல்லது. லட்சுமி தேவியின் ஆசி பெற்று தருவதோடு, உங்கள் பொருளாதார நிலையை மேம்படுத்தவும் உதவி செய்கிறது!


**ரேடிக்ஸ் எண் 4 – மரப் பேனா!**

ராகுவின் ஆற்றலுடன் தொடர்பு கொண்ட ஒரு எண்ணாக ரேடிக்ஸ் எண் 4 பார்க்கப்படுகிறது. கடின உழைப்பு மற்றும் நிலைத்தன்மைக்கு பெயர் பெற்ற இவர்கள், தங்கள் வாழ்க்கையில் நேர்மறை ஆற்றலை அதிகரிக்க, தங்கள் உடன் எப்போதும் ஒரு மரப் பேனாவை வைத்திருப்பது நல்லது. மரம் என்பது பூமியின் மூலக்கூறின் அடையாளமாக கருதப்படும் நிலையில், மரத்தால் ஆன பேனா மட்டும் அல்ல, வேறு பொருளையும் நீங்கள் உங்கள் உடன் வைத்திருக்கலாம்.

**ரேடிக்ஸ் எண் 5 – பச்சை நிறத்தில் பொருள்!**



ரேடிக்ஸ் எண் 5 கொண்டவர்கள் புதனின் ஆற்றலை கொண்டவர்கள். பேச்சாற்றல், புத்திக்கூர்மை, தனித்துவமான சிந்திக்கும் ஆற்றலுக்கு பெயர் பெற்றவர்கள். ஜோதிட குறிப்புகளில் புதனுக்கு உகந்த நிறமாக பச்சை நிறம் பார்க்கப்படுகிறது. அந்த வகையில், எண் 5 கொண்டவர்கள் தங்கள் உடன் எப்போதும் ஒரு பச்சை நிற பொருளை வைத்திருக்கலாம். உதாரணமாக பச்சை நிற கைக்குட்டையை பயன்படுத்தலாம்.



**ரேடிக்ஸ் எண் 6 – வாசனை பொருட்கள்!**

மாதத்தின் 6, 15, 24 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு ரேடிக்ஸ் எண் 6 வழங்கப்படுகிறது. மேலும், இந்த எண்ணுடன் தொடர்பு கொண்ட கிரகமாக சுக்கிரன் குறிப்பிடப்படுகிறது. நவகிரகங்களில் ஆற்றல் மிக்க ஒரு கிரகமாக சுக்கிரன் பார்க்கப்படுகிறார். ஆடம்பரம், செல்வ வரவு, செழிப்புடன் தொடர்பு கொண்ட இந்த கிரகத்தை துணையாக கொண்டவர்கள், தங்கள் உடன் எப்போதும் ஒரு நறுமண பொருளை வைத்திருப்பது நல்லது!



**ரேடிக்ஸ் எண் 7 – கடிகாரம்!**

கேதுவின் ஆற்றல் கொண்ட ரேடிக்ஸ் எண், அடிப்படையில் தலைமைப் பண்பு கொண்டவர்கள். ஆன்மீகம் மற்றும் ஆழ்ந்த சிந்தனை இரண்டும் இவர்களின் விருப்பமான விஷயங்கள் ஆகும். ரேடிக்ஸ் எண் 7 கொண்ட வர்கள் தங்கள் வாழ்க்கையில் நேர்மறை ஆற்றலை அதிகரிக்க தங்களுடன் எப்போதும் ஒரு உலோகத்தால் ஆன கடிகாரத்தை வைத்திருப்பது நல்லது. செல்வ செழிப்புடன் கூடிய மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு இது உதவியாக இருக்கும்.



**ரேடிக்ஸ் எண் 8 – நீல நிற கைகுட்டை!**

ரேடிக்ஸ் எண் 8 கொண்டவர்கள், சனி கிரகத்தின் ஆற்றலை பெற்றவர்கள். கடின உழைப்புக்கு பெயர் பெற்றவர்கள், ஆழ்ந்த சிந்தனையாளர்கள், ராஜதந்திரிகள். சனி பகவானின் ஆற்றலுடன் தொடர்பு கொண்ட இவர்கள், சனி பகவானுக்கு பிடித்த நிறமான நீல நிறத்தை தங்கள் உடன் வைத்திருப்பது நல்லது. உதாரணமாக, நீல நிறத்தால் ஆன கைக்குட்டை ஒன்றை தங்கள் உடன் வைத்திருக்கலாம்.



**ரேடிக்ஸ் எண் 9 – சிவப்பு நிற நூல்!**

செவ்வாய் கிரகத்தை அதிபதியாக கொண்ட ரேடிக்ஸ் எண் 9, தங்களின் துணிச்சலான குணத்திற்கு பெயர் பெற்றவர்கள். சவால் நிறைந்த பணிகளை தைரியமாக எடுத்து செய்யும் மன வலிமை கொண்டவர்கள். எண் கணித நிபுணர்கள் கூற்றுப்படி இவர்கள், தங்களுடன் ஏதேனும் ஒரு புனித பொருளை வைத்திருப்பது நல்லது. அந்த வகையில் மத நம்பிக்கைகளின் அடிப்படையில் நம் மணிக்கட்டில் கட்டும் மௌலி நூலை (சிவப்பு நிற நூல்) தங்கள் உடன் வைத்திருக்கலாம்!



(பொறுப்புத் துறப்பு: இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பொதுவான எண் கணித வழிகாட்டி, மத நம்பிக்கைகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளன. அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்ட தகவல்கள் அல்ல!)

# திருப்பூர் வடக்கு எஸ்டிபிஐ கட்சி சார்பில் சமூக நல்லிணக்க இஃப்தார் நிகழ்ச்சி!

திருப்பூர், மார்ச். 12–

எஸ்டிபிஐ கட்சி திருப்பூர் வடக்கு மாவட்டம் சார்பில் சமூக நல்லிணக்க இஃப்தார் நிகழ்ச்சி எஸ் வி காலனியில் உள்ள தனியார் திருமண மஹாலில் தொகுதி தலைவர் முகமது யாசின் தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வின் வரவேற்புரையை தொகுதி செயலாளர் பாஷா மைதீன் வழங்கினார்.சமூக நல்லிணக்க இப்தார் நிகழ்வின் தொகுப்புரையை தொகுதி பொருளாளர் அப்பாஸ் வழங்கினார்.மாநில பொருளாளர் முஸ்தபா.திருப்பூர் மாநகராட்சி மேயர் தினேஷ்குமார் சிறப்புரையாற்றினார்கள் இந்த நிகழ்வில் மாநில செயலாளர் கரீம்.வடக்கு மாவட்ட தலைவர் பஷீர் அஹமது.மாவட்ட பொதுச் செயலாளர் அப்துல் வகாப்.மாவட்ட தலைவர் மகளிர் அணி பாத்திமா.மற்றும்




திமுக மண்டல தலைவர் தம்பி கோவிந்தராஜ். பகுதி செயலாளர் போலார் சம்பத். கவுன்சிலர் ராஜேந்திரன்.திமுக வார்டு செயலாளர்கள் நித்தியானந்தம்.

கோமகன்.மற்றும் எஸ்டிபி கட்சி மாநில மாவட்ட கிளை நிர்வாகிகள் பங்கேற்றனர் மேட்டுப்பாளையம் கிளை செயலாளர் சேக் அலாவுதீன் நன்றி உரையாற்றினார்

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



### உங்கள் கால்களில் எப்போதும் எரியும் உணர்வு ஏற்படுகிறதா..? அது ஒரு தீவிரமான உடல்நலப் பிரச்சனையின் அறிகுறி!



நம் அன்றாட வாழ்வில் சில வகையான உடல்நலப் பிரச்சினைகளை நாம் எதிர்கொள்கிறோம். இவை பயப்பட வேண்டிய அளவுக்குப் பெரியதாகத் தெரியவில்லை என்பதால், இந்தப் பிரச்சினைகளின் அறிகுறிகளை நாம் இலகுவாக எடுத்துக்கொள்கிறோம். கால் வலி, கால்களில் எரியும் உணர்வு போன்ற பிரச்சனைகள் கூட பெரிதாக எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. இந்தப் பிரச்சினைகள் உடல் உழைப்பு அல்லது வேறு ஏதாவது காரணத்தால் ஏற்படக்கூடும் என்று நாங்கள் நினைக்கிறோம்.

இருப்பினும், உங்கள் கால்களில் அடிக்கடி எரியும் உணர்வு ஏற்பட்டால், இனி தாமதிக்கக் கூடாது என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். இது உடலில் உள்ள ஆபத்தான நோய்களின் அறிகுறிகளில் ஒன்றாகும் என்பதால் எச்சரிக்கையாக இருக்குமாறு அவர்கள் எச்சரிக்கிறார்கள். எனவே, உங்கள் கால்களில் எரிவது எதைக் குறிக்கிறது? இந்தப் பிரச்சினையைக் குறைக்க என்ன செய்ய வேண்டும் என்பதை இப்போது பார்க்கலாம்..

காரணம் என்ன? பாதங்களில் எரியும் உணர்வுக்கான உண்மையான காரணம் உடலில் வைட்டமின் பி, ஃபோலிக் அமிலம் மற்றும் கால்சியம் குறைபாடு ஆகும். வைட்டமின் பி12, பி6 மற்றும் பி9 அளவு குறைவாக இருந்தால் பாதங்களில் எரியும் அல்லது கூச்ச உணர்வு ஏற்படும். இது குறிப்பிட்ட வயதினரை மட்டும் தொந்தரவு செய்யும் பிரச்சனை அல்ல. இது கிட்டத்தட்ட அனைவரிடமும் காணப்படுகிறது.

வயதைப் பொருட்படுத்தாமல், போதுமான ஊட்டச்சத்துக்கள் இல்லாதவர்களுக்கு பாதங்களில் எரியும் உணர்வு ஏற்படலாம். அதிகப்படியான மது அருந்துதல், நச்சுகள் மற்றும் சில மருந்துகளின் பக்க விளைவுகள் நரம்புகளை சேதப்படுத்தும். இது நரம்பு மண்டலத்தின் செயல்பாட்டைப் பாதித்து, பாதங்களில் எரியும் உணர்வை ஏற்படுத்தும்.

கால்களில் கூச்ச உணர்வு அல்லது எரியும் உணர்வு ஆபத்தான நோய்களின் அறிகுறி என்று நிபுணர்கள் கூறுகின்றனர். சிறுநீரகப் பிரச்சினைகள் உள்ளவர்களுக்கு இந்த அறிகுறி பொதுவானது. குறைந்த தைராய்டு ஹார்மோன் அளவுகளும் இதற்கு வழிவகுக்கும். மேலும், பூஞ்சை தொற்றுகளும் பாதங்களில் எரியும் உணர்வை ஏற்படுத்தும்.

ரத்த நாள தொற்று உள்ளவர்களுக்கு இந்த அறிகுறி பெரும்பாலும் காணப்படுகிறது. இந்த அறிகுறி சில நாட்களுக்குப் பிறகு குறையவில்லை அல்லது அடிக்கடி கடுமையானதாகிவிட்டால், உடனடியாக மருத்துவரை அணுகுவது நல்லது. பொருத்தமான சிகிச்சைகள் மற்றும் சரியான நேரத்தில் சிகிச்சை பெறுவதன் மூலம் அச்சுறுத்தலைத் தவிர்க்கலாம்.

**எப்படி குறைப்பது..?**

பாதங்கள் எரியும் உணர்வை தடுக்க பல்வேறு வகையான மருந்துகள் உள்ளன. இருப்பினும், வீட்டு வைத்தியம் மூலமாகவும் இந்தப் பிரச்சனையைக் குறைக்க முடியும் என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். எரியும் உணர்வைக் குறைக்க குளிர்ந்த நீரைப் பயன்படுத்துவது ஒரு நல்ல வழி. ஒவ்வொரு நாளும் உங்கள் கால்களை குளிர்ந்த நீரில் ஒரு தொட்டியில் வைத்திருங்கள். இது பாதங்களில் உள்ள நரம்புகளைத் தளர்த்துகிறது மற்றும் எரிச்சலைக் குறைக்கிறது. இது ரத்த ஓட்டத்தை மேம்படுத்துகிறது.


உப்பு கலந்த சூடான நீரில் உங்கள் கால்களை ஊறவைப்பது உங்கள் தசைகளை தளர்த்த உதவும். மறுபுறம், உங்கள் உடலில் இரத்த ஓட்டத்தை மேம்படுத்த தேங்காய் எண்ணெயால் மசாஜ் செய்யலாம். மஞ்சள் மற்றும் கற்றாழையை கலந்து பேஸ்ட் செய்து உங்கள் பாதங்களில் தடவுவது உங்களுக்கு நல்ல பலனைத் தரும். மஞ்சளின் அழற்சி எதிர்ப்பு பண்புகள் உங்கள் பாதங்களில் ஏற்படும் வீக்கத்தைக் குறைக்கும்.

## பொதுப்போக்குவரத்துக்கு ஆஃப்லைன் பேமண்ட் வசதியுடன் 'On-the-Go' கார்டை அறிமுகப்படுத்தும் ஃபோன்பே!

சென்னை, மார்ச். 12–

ஃபோன்பே பொதுப் போக்குவரத்தில் ஆஃப்லைன் முறையில் எளிதாக கட்டணம் செலுத்த உதவும் 'RuPay On–the–Go' கார்டை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த தேசிய பொதுப் போக்குவரத்து கார்டு (NCMC) பயணிகள் மெட்ரோ, பேருந்து, ரயில், டோல் மற்றும் பார்க்கிங் போன்ற சேவைகளில் வேகம் tap–and–pay பரிவர்த்தனைகளை செய்ய அனுமதிக்கிறது. இணைய இணைப்பு இல்லாத சூழலில் இந்த கார்டு செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த முன்பணம் அடிப்படையில் கார்டில் இருப்பு தொகை நேரடியாக சிப்பில் சேமிக்கப்படுகிறது, இதனால்




முழுமையான ஆஃப்லைன் contactless பேமண்ட் செய்ய முடியும். பயனர்கள் அதிகபட்சமாக ₹2000 வரை தொகையை ஏற்ற முடியும்; இதில் ஒரு முறை ஆஃப்லைன் பரிவர்த்தனை வரம்பு ₹500 ஆகும். இந்த சேவை முதற்கட்டமாக Hyderabad Metroவில் L&T Metro Rail (Hyderabad) Limited உடன் கூட்டாண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அறிமுகம் குறித்து Deep Agrawal, Head of Payments, PhonePe கூறுகையில், "தினமும் பொதுப் போக்குவரத்தை பயன்படுத்தும் கோடிக்கணக்கான பயன்களை கருத்தில் கொண்டு PhonePe 'On–the–Go' கார்டை அறிமுகப்படுத்துகிறோம். RuPay இயக்கும் NCMC அமைப்பை அடிப்படையாகக் கொண்டு, வேகமான tap–and–pay பரிவர்த்தனைகளை இணைய இணைப்பு இல்லாமல் செய்ய முடியும். இது இந்தியா முழுவதும் ஒருங்கிணைந்த டிஜிட்டல் போக்குவரத்து கட்டண அமைப்பு உருவாக்குவதற்கான முக்கியமான படியாகும்," என்றார்.

## முதல் 500 BITSAT ரேங்க் மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் இல்லாத சேர்க்கை –பிர்லா தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் நிறுவனம், பிலானி அறிவிப்பு

சென்னை, மார்ச் 12–

பிர்லா தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் நிறுவனம், பிலானி (BITS பிளான்) தனது மாணவர் சேர்க்கை முறையில் முக்கியமான புதிய முயற்சியை அறிவித்துள்ளது. AY 202627 முதல், BITSAT தேர்வில் முதல் 500 ரேங்க் பெற்ற மாணவர்களுக்கு முழு கல்விக் கட்டணம் இல்லாத சேர்க்கை வழங்கப்படும். ஆண்டு குடும்ப வருமானம் ₹20 லட்சம் வரை உள்ள தகுதியான மாணவர்கள் நான்கு ஆண்டுகளுக்கும் முழு கல்விக் கட்டண உதவியைப் பெற முடியும். இந்த வாய்ப்பு மாணவர் சேர்க்கை நேரத்தில் வழங்கப்படும் உறுதியாகும். BITS பிளான் கடந்த ஆண்டில் மட்டும் ₹132 கோடி மதிப்பிலான உதவித்தொகைகளை வழங்கி, அதன் வளாகங்களில் உள்ள நான்கு மாணவர்கள் அவருக்கு நிதியுதவி கிடைக்கும் வகையில் ஆதரவு வழங்கியுள்ளது. இந்த புதிய முயற்சி மூலம், திறமையான மாணவர்கள் பொருளாதார நிலையைப் பொருட்படுத்தாமல் உயர்கல்வியைத் தேர்வு செய்யும் வாய்ப்பு கிடைக்கும் என்று நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த அறிவிப்பு குறித்து வி. ராம் கோபால் ராவ், குழு துணைவேந்தர்,பிர்லா தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் நிறுவனம், பிலானி கூறுகையில், "திறமை உள்ள மாணவர்களுக்கு பணம் ஒருபோதும் தடையாக இருக்கக்கூடாது. முதல் 500 BITSAT ரேங்க் பெறுபவர்களுக்கு கல்விக் கட்டணம் இல்லாத சேர்க்கை வழங்குவது ஒரு முக்கிய முன்னேற்றமாகும்," என்றார்.

## இரட்டை இலக்க வளர்ச்சியுடன் FY27-க்குள் லாப நிலை நோக்கி எடெல்வைஸ் ஆயுள் காப்பீடு!

சென்னை , மார்ச்.12–

Edelweiss Life Insurance நிறுவனம் FY27–க்குள் லாப–நட்டமற்ற (break–even) நிலையை அடைவதை இலக்காகக் கொண்டுள்ளது தெரிவித்துள்ளது. அடுத்த 23 ஆண்டுகளில் நிறுவனம் இரட்டை இலக்க வளர்ச்சியை எதிர்பார்க்கிறது. Q3FY26–ல் நிறுவனத்தின் தனிநபர் APE முந்தைய ஆண்டை விட 38% வளர்ச்சி கண்டுள்ளது, இது தொழில்துறை சராசரியை விட அதிகமாகும். FY26–இல் நிறுவனம் சுமார் ₹650 கோடி புதிய வணிகம் மற்றும் ₹2,400 கோடி மொத்த பிரீமியம் வருவாய் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நிறுவனம் தற்போது பல்வேறு விநியோக சேனல்கள் மூலம் செயல்பட்டு வருகிறது. சொந்த விநியோகம் மற்றும் கூட்டாண்மை விநியோகம் தலா 50% பங்களிப்பை வழங்குகின்றது. இந்த சமநிலை நிறுவனம் நீண்ட கால வளர்ச்சியை நோக்கி பல்வேறு தயாரிப்புகள் மற்றும் சேனல்களில் வணிகத்தை விரிவுபடுத்த



உதவுகிறது. இந்த வளர்ச்சி குறித்து சுமித் ராய், நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை செயல் அதிகாரி, Edelweiss Life Insurance கூறுகையில், "கடந்த சில ஆண்டுகளில் எங்கள் நிறுவனம் வலுவான அடித்தளத்தை உருவாக்கியுள்ளது. அடுத்த சில ஆண்டுகளில் வளர்ச்சியைத் தொடர்ந்து முன்னெடுத்துச், FY27–க்குள் லாப–நட்டமற்ற நிலையை அடைவதே எங்களின் முக்கிய இலக்கு," என்றார்.

## டாடா பவர் - சேல்ஸ்ஃபோர்ஸ் கூட்டாண்மை: இந்தியாவின் பசுமை ஆற்றல் மாற்றத்திற்கு வேகம்!

சென்னை, மார்ச். 12–

Tata Power மற்றும் Salesforce இணைந்து இந்தியாவின் தூய்மையான எரிசக்தி மாற்றத்தை வேகப்படுத்தும் நோக்கில் டிஜிட்டல் கூட்டாண்மையை அறிவித்துள்ளன. இந்த ஒத்துழைப்பு மூலம் rooftop solar, EV charging மற்றும் smart energy management போன்ற சேவைகளை AI மற்றும் data அடிப்படையிலான தொழில்நுட்பத்தின் மூலம் விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.




இதன் மூலம் வாடிக்கையாளர்கள் மற்றும் கூட்டாளிகளுக்கு தடையற்ற டிஜிட்டல் அனுபவம் வழங்கப்படுவதுடன், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சேவைகள் வேகமாக விரிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, Tata Power Renewable Energy Limited நிறுவனத்தின் செயல்பாடுகள் Agent Force Sales, Service மற்றும் Marketing தீர்வுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த தளம் lead management, inventory visibility, process automation மற்றும் real–time performance tracking போன்ற அம்சங்களை ஒருங்கிணைத்து, வாடிக்கையாளர் மற்றும் கூட்டாளர் பயணத்தை முழுமையாக டிஜிட்டல் மயமாகிறது. இதன் மூலம் செயல்திறன் அதிகரிக்க, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வணிக வளர்ச்சிக்கு வலுவான ஆதரவு கிடைக்கும்.

Praveer Sinha, CEO & MD, Tata Power கூறுகையில், "நாட்டுமுழுவதும் rooftop solar மற்றும் EV charging உள்கட்டமைப்பை விரிவுபடுத்தி, இந்தியாவின் பசுமை ஆற்றல் மாற்றத்தின் Tata Power முன்னணியில் உள்ளது. இந்த வளர்ச்சியை மேலும் வேகப்படுத்த Salesforce நிறுவனத்தின் AI தளத்தை பயன்படுத்தி, வாடிக்கையாளர் மற்றும் கூட்டாளர் அனுபவத்தை அதிக வெளிப்படைத்தன்மை மற்றும் சுறுசுறுப்புடன் மாற்றியமைத்து வருகிறார்," என்றார். மேலும் Arundhati Bhattacharya, President & CEO South Asia, Salesforce, "டேட்டா, AI மற்றும் தானியக்கத்தின் சக்தியை பயன்படுத்தி, இந்தியாவின் பசுமை ஆற்றல் மாற்றத்தை முன்னேற்ற Tata Power உடன் இணைந்து பணியாற்றுவதில் பெருமை கொள்கிறேன்," என்றார்.

## தம்பதிகள் மீண்டும் இணைவது ஊக்குவிக்கும் #MarieLight-Mode பிரச்சாரத்தை அறிமுகப்படுத்திய சன்ஃபீஸ்ட் மேரி லைட்

மதுரை , மார்ச் 12–

சன்ஃபீஸ்ட் மேரி லைட் தனது புதிய #மேரிலைட்மோட் பிரச்சாரத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. சமீபத்தில் சென்னையில் நடத்தப்பட்ட ஆய்வில், பதிலளித்தவர்களில் 53% பேர் தங்கள் துணைகளுடன் செலவிடுவதை விட தொலைபேசியில் அதிக நேரம் செலவிடுவது தெரிவித்துள்ளார். இந்த நிலையை மாற்றி, தம்பதிகள் தங்கள் தொலைபேசிகளை ஒதுக்கி வைத்து தேநீர் மற்றும் மேரி லைட் பிஸ்கட்டில் அர்த்தமுள்ள உரையாடல்களை மீண்டும் தொடங்க ஊக்குவிப்பதே இந்த முயற்சியின் நோக்கமாகும்.




பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்ட TVC–யில் ஜோதிகா மற்றும் செந்தில் இணைந்து நடித்துள்ளனர். இதில், டிஜிட்டல் உலகில் மூழ்கியுள்ள ஒரு நவீன தம்பதியர் தங்கள் தொலைபேசிகளை அணைத்து வைத்து, தேநீர் நேரத்தை மீண்டும் உண்மையான சிரிப்பும் உரையாடல்களும் நிறைந்த தருணமாக மாற்றிக் கொள்வது காட்டப்படுகிறது.

இந்த பிரச்சாரம் குறித்து சூரஜ் குரானா, ஐடிசி லிமிடெட் நிறுவனத்தின் பிஸ்கட் மற்றும் கேக்குகள் துறையின் துணைத் தலைவர் மற்றும் சந்தைப்படுத்தல் தலைவர், கூறுகையில், "சன்ஃபீஸ்ட் மேரி லைட்டில், தினசரி பகிரப்படும் சிறிய தருணங்களே வலுவான உறவுகளை உருவாக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். #மேரிலைட்மோட் மூ0லம் தம்பதிகள் தொலைபேசி திரையில் இருந்து ஓய்வு எடுத்து, ஒன்றாக தரமான நேரத்தை செலவிடும் மகிழ்ச்சியை மீண்டும் கண்டறிய ஊக்குவிக்கிறோம்," என்றார்.

## திருச்சியில் சிற்றுண்டி நேரத்தை இன்னும் கொஞ்சம் வேடிக்கையாக மாற்றும் நியூட்ரிசாய்ஸ்!




திருச்சி , மார்ச். 12–

திருச்சியின் அமைதியான மாலைகளில், சிறிய முடிவுகளே நாளின் மனநிலையை அமைக்கின்றன. அப்படிப்பட்ட எளிய மற்றும் நல்ல தேர்வுகளில் ஒன்று நுயுட்ரிசாய்ஸ் (ஊட்டச்சத்து தேர்வு)கொண்டு தொடங்குவது. பெரிய மாற்றம் போலத் தெரியாமல், சிறந்த ஸ்நாக் தேர்வாக இது அமைகிறது. அதை அப்படியே சாப்பிட்டாலும் அல்லது சில எளிய டாப்பிங்ஸ் சேர்த்தாலும், அந்த முதல் விழிப்புணர்வான தேர்வு மாலையின் மற்ற நேரத்தையும் சீராக அமைக்க உதவுகிறது. இதனால் லேசான ஸ்நாக் எடுத்துக்கொள்வது, டீயில் சர்க்கரை சேர்க்காமல் இருப்பது போன்ற நல்ல பழக்கங்களையும் எளிதாக தொடர முடிகிறது. நியூட்ரிசாய்ஸை மிளிரச் செய்ய இதோ வழிகள் — எளிய பொருட்கள், எந்த சிரமமும் இல்லாமல், உங்கள் அன்றாட சிகிச்சை நேரத்தின் கதாநாயகனாக எளிதில் மாறும் சிற்றுண்டி:

சுவையான சேவ் பூரி தயாரிக்க முதலில் தேவையான அனைத்து பொருட்களையும் தயாராக வைத்துக் கொள்ளுங்கள். ஒரு கலவை பாத்திரத்தில் முளைகட்டிய பச்சைப்பயிறு (மூங்) மற்றும் வேகவைத்த உருளைக்கிழங்கை சேர்த்து, அதில் மிளகாய்த்தூள், சாட் மசாலா மற்றும் உப்பு தூவி நன்றாக கலக்கவும். பின்னர் பச்சை சட்னி மற்றும் புளி சட்னியை சேர்த்து, அனைத்தையும் நன்றாக கலக்கி சுவையான மூங் சாட் தயாரிக்கவும். அதன் பிறகு பிரிட்டானியா நுட்ரிச்சாய்ஸ் 5 தானிய டைஜெஸ்டிவ் பிஸ்கட்டுகளை ஒரு தட்டில் வைத்து, ஒவ்வொரு பிஸ்கட்டின் மேல் தயாரித்த சாட்டை ஒரு கரண்டி அளவு வைத்து அலங்கரிக்கவும். கடைசியாக நைலான் சேவ் மற்றும் நறுக்கிய கொத்தமல்லி தூவி பரிமாறுங்கள். இப்போது உங்கள் வீட்டிலேயே தயாரித்த சுவையான சேவ் பூரி சாப்பிடத் தயாராக உள்ளது. புதிய பொருட்களை பயன்படுத்தினால் இது இன்னும் மொறு மொறுப்பாகவும் சுவையாகவும் இருக்கும்.

## வேலை வாய்ப்பு

### தேசிய மாணவர் படை (தமிழ்நாடு) காலியிடங்கள்!

**NCC TN Recruitment 2026**

- Vacancy: 02
- Post Name: Store Attendant
- Qualification: 8th
- Selection Process: Short Listing, Interview

நிறுவனத்தின் பெயர்: தேசிய கேடட் கார்ப்ஸ் துறை, தமிழ்நாடு

அறிவிப்பு எண்: 01/4G/SA/2026 தேதி: 11.03.2026

வேலை வகை: தமிழ்நாடு அரசு வேலைகள்

வேலைவாய்ப்பு வகை: வழக்கமான அடிப்படை

மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 02 கடை உதவியாளர் பதவிகள்

பணியிட இடம்: திருச்சி, திண்டுக்கல்

தொடக்க தேதி: 11.03.2026

கடைசி தேதி: 08.04.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.tn.gov.in/


## இந்திய விற்பனை நிபுணர்கள் 91% பேர்: வணிக வெற்றிக்குத் AI ஏஜென்ட்கள் அவசியம் – Salesforce அறிக்கை!



சென்னை, மார்ச். 12–


Salesforce வெளியிட்ட சமீபத்திய State of Sales அறிக்கையின் படி, இந்திய விற்பனை நிபுணர்கள் 91% பேர் வணிக வெற்றிக்கு AI ஏஜென்ட்கள் அவசியம் என்று கருதுகின்றனர். 2026 ஆம் ஆண்டுக்கான உயர்ந்த விற்பனை இலக்குகளை அடைய விற்பனை குழுக்கள் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை அதிகம் பயன்படுத்தத் தொடங்கியுள்ளன. ஆய்வின் படி, இந்திய விற்பனை நிறுவனங்களில் 90% நிறுவனங்கள் ஏற்கனவே AI தொழில்நுட்பத்தை வாடிக்கையாளர் தேடல், முன்னறிவிப்பு, லீட் ஸ்கோரிங் மற்றும் மின்னஞ்சல் தயாரிப்பு போன்ற பணிகளில் பயன்படுத்துகின்றன. மேலும், இந்திய விற்பனை நிபுணர்கள் 54% பேர் ஏற்கனவே AI ஏஜென்ட்களை பயன்படுத்தி வருகின்றனர், மேலும் பலர் எதிர்காலத்தில் அதை பயன்படுத்த திட்டமிட்டுள்ளது. AI ஏஜென்ட்கள் பயன்படுத்தப்படும்போது வாடிக்கையாளர் ஆய்வு நேரத்தை 35% வரை மற்றும் உள்ளடக்க உருவாக்க நேரத்தை 38% வரை குறைத்து, விற்பனை குழுக்களின் செயல்திறனை அதிகரிக்கும் என ஆய்வு தெரிவிக்கிறது.

இந்த ஆய்வு குறித்து Sangeeta Giri, SVP & Chief Operating Officer South Asia, Salesforce கூறுகையில், "இந்தியாவின் கடுமையான போட்டி நிறைந்த சந்தையில் விற்பனை முறைகள் 'அதிக உழைப்பு' முறைமையிலிருந்து 'உயர் துல்லியம்' கொண்ட அணுகுமுறைக்கு மாறி வருகின்றன. AI ஏஜென்ட்கள் செயல்முறைகளில் உள்ள தடைகளை குறைத்து, விற்பனை குழுக்களுக்கு வாடிக்கையாளர்களின் நம்பிக்கை உருவாக்க தேவையான நேரத்தை வழங்குகின்றன," என்றார்.



## சினிமா துளிகள்..!

### ஹன்சிகாவுக்கு விவாகரத்து..ஜீவனாம்சம் கிடையாது! நீதிமன்றம் உத்தரவு..!



ஹன்சிகாவிற்கு, 2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சோகைல் கதூரியா என்பவருடன் திருமணம் நடந்தது. சோகைல், தொழிலதிபர் ஆவார். இருவரும் ஆரம்பத்தில் நண்பர்களாக இருந்து பின்பு காதலர்களாக மாறியவர்கள் ஆவர். சோகைல், ஹன்சிகா திருமணம் ஆன புதிதில் வெவ்வேறு இடங்களுக்கு சென்று போட்டோக்கள் பதிவிடுவது, காதல் மழை பொழிவது என்றிருந்தனர். ஆனால், சில மாதங்களில் அப்படிப்பட்ட போஸ்ட்கள் வருவது நின்று போனது.

ஹன்சிகாவும் சோகைலும் தங்களின் திருமண புகைப்படங்களை சமூக வலைதளங்களில் இருந்து நீக்கினர். இதையடுத்து ஒரு வேளை இருவரும் பிரிந்து வாழ்கின்றனரோ என்கிற சந்தேகம் அனைவருக்கும் வந்தது. இதை உறுதிப்படுத்தும் வகையில், ஹன்சிகாவும் தனது திருமணம் குறித்து வெளிவந்த எந்த சார்ச்சைக்கும் பதில் தெரிவிக்காமல் இருந்தார். ஹன்சிகாவிற்கும் சோகைலுக்கும் இப்போது விவாகரத்து வழங்கி, மும்பை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த விவாகரத்தின் போது ஜீவனாம்சம் எதுவும் வேண்டாம் என்று ஹன்சிகா சொன்னதாக தெரிகிறது.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ்

பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை

Ph: 98659 88881



# பெண்களுக்கான 33% இடஒதுக்கீட்டை 2029-க்குள் அமல்படுத்த நடவடிக்கை!

புதுடெல்லி, மார்ச். 12–

பார்லிமென்ட் மற்றும் மாநில சட்டசபைகளில் பெண்களுக்கு, 33 சதவீத




இடஒதுக்கீட்டை, 2029 லோக்சபா தேர்தலுக்கு முன்பாகவே அமல்படுத்த மத்திய அரசு திட்டமிட்டு உள்ளது. பார்லிமென்ட் மற்றும் மாநில சட்டசபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்காக, 'நாரி சக்தி வந்தன் ஆதினியம்' என்ற மசோதாவை 2023 செப்டம்பரில் மத்திய அரசு நிறைவேற்றியது. இந்த சட்டத்தின்படி, லோக்சபா மற்றும் மாநில சட்டசபைகளில், மூன்றில் ஒரு பங்கு இடத்தை பெண்களுக்கு ஒதுக்கீடு செய்தாக வேண்டும். ஆனால், இந்த சட்டத்தின் தற்போதைய விதிமுறைகளின்படி, பெண்களுக்கு உடனடியாக இடஒதுக்கீடு கிடைத்துவிடாது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் முடிவடைந்து புதிய எல்லைகள் வரையறை செய்யப்பட்ட பின், தொகுதி மறுவரையறை செய்யப்பட வேண்டும். அதன் பின், பார்லிமென்ட் மற்றும் மாநில சட்டசபைகளின் எண்ணிக்கையில் ஏற்படும் மாற்றத்தின் அடிப்படையில் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த முடியும்.

இதையடுத்து, இந்த தள்ளிப்போகும் பிரச்னையை முறியடிக்க மத்திய அரசு புதிய யோசனையை கையில் எடுத்துள்ளது. அதாவது, எல்லை நிர்ணய செயல்முறை மற்றும் பெண்கள் இடஒதுக்கீட்டுக்கு இடையே உள்ள தொடர்பை சட்ட திருத்தம் மூலம் பிரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு செய்தால், தொகுதி மறுவரையறை வரை காத்திருக்காமல், பெண்கள் இடஒதுக்கீட்டை 2029க்கு முன்பாகவே அமல்படுத்த முடியும். இதற்கான சாத்தியக்கூறுகளை மத்திய அரசு பரிசீலித்து வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

# மாபெரும் தமிழ்க்கனவை சாத்தியப்படுத்துவோம்! வெல்வோம் ஒன்றாக! - முதலமைச்சர்!!

சென்னை, மார்ச். 12–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், #DravidianModel–இல் உருவான 2 #TIDELPark மற்றும் 16 #NeoTIDELPark! கணினித் துறையில் தமிழ்நாடு உயர்ந்திடத் தலைவர் கலைஞரின் தொலை நோக்குப் பார்வையில் உருவானவை டைடல் பூங்காக்கள்.




கடந்த 2016–21 அ.தி.மு.க. ஆட்சியின் இறுதிக்காலத்தில் ஒரே ஒரு டைடல் பூங்காவுக்கு மட்டுமே அடிக்கல் நாட்டினர்.

நமது #DravidianModel ஆட்சியில், அவர்கள் அடிக்கல் நாட்டிய பட்டாபிராம் டைடல் பூங்காவை விரைந்து முடித்துத் திறந்தது மட்டுமல்ல,

விழுப்புரம், தஞ்சாவூர், சேலம், தூத்துக்குடி, திருப்பூர், வேலூர், காரைக்குடி ஆகிய ஏழு இடங்களில், சுமார் 4,200 பேருக்கு வேலைவாய்ப்பை வழங்கும் #NeoTIDELPark–களை நிறுவித் திறந்து வைத்துள்ளோம்.

இதுமட்டுமின்றி, மதுரை மற்றும் திருச்சி ஆகிய இரண்டு இடங்களில், சுமார் 12,000 பேருக்கு வேலைவாய்ப்பை வழங்கும் #TIDELPark–களும், திருவண்ணாமலை, இராசிபுரம், நாகர்கோயில், திருநெல்வேலி, விருதுநகர், ஈரோடு, கரூர், புதுக்கோட்டை, நாகப்பட்டினம் ஆகிய ஒன்பது இடங்களில், சுமார் 5,400 பேருக்கு வேலைவாய்ப்பை வழங்கும் #NeoTIDELPark–உம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

வளர்ச்சியைப் பரவலாக்கி, அனைத்து மாவட்டங்களையும் – அனைத்துத் தரப்பு மக்களையும் முன்னேற்றுவோம்! மாபெரும் தமிழ்க்கனவைச் சாத்தியப்படுத்துவோம்! #வெல்வோம்_ஒன்றாக! இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தலைமை தேர்தல் கமிஷனரை பதவி நீக்க 'இண்டி' கூட்டணி எம்.பி.,க்கள் கையெழுத்து!

புதுடில்லி, மார்ச். 12–

தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ் குமாரை பதவியில் இருந்து நீக்கம் செய்வதற்கான தீர்மான நோட்டீசில், 'இண்டி' கூட்டணி கட்சி எம்.பி.,க்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

மத்தியில் ஆளும் பா.ஜ.,வுக்கு ஆதரவாக தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ் குமார் செயல்படுவதாகவும், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் என்ற பெயரில், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் தகுதிவாய்ந்த ஏராளமான வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளதாகவும், காங்., – தி.மு.க., – சமாஜ்வாதி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அடங்கிய, 'இண்டி' கூட்டணி குற்றஞ்சாட்டி உள்ளது.

அவரை பதவியில் இருந்து நீக்க வேண்டும் என, மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியின் திரிணமுல் காங்கிரசும் குரல்



கொடுத்தது.

இந்நிலையில், தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ் குமாரை பதவியில் இருந்து நீக்குவதற்கான தீர்மான நோட்டீசில், இண்டி கூட்டணி கட்சிகளின் எம்.பி.,க்கள் கையெழுத்திட்டுள்ளனர். இந்த நோட்டீசை லோக்சபா, ராஜ்யசபா என இரு சபைகளிலும் அளிக்க அக்கூட்டணி முடிவு செய்துள்ளது.

லோக்சபாவில், ஞானேஷ் குமார் பதவி நீக்க தீர்மான நோட்டீசில், 120 எம்.பி.,க்களும், ராஜ்யசபாவில், 60 எம்.பி.,க்களும் கையெழுத்திட்டுள்ளனர். இந்த நோட்டீஸ்களை இரு சபைகளிலும் விரைவில் வழங்க, இண்டி கூட்டணி முடிவு செய்துள்ளது. நம் வரலாற்றிலேயே தலைமை தேர்தல் கமிஷனருக்கு எதிராக பதவி நீக்க நோட்டீஸ் வழங்கப்பட உள்ளது இதுவே முதன்முறை.

இரு சபைகளிலும் ஆளும் பா.ஜ., தலைமையிலான தே.ஜ., கூட்டணிக்கு பெரும்பான்மை இருப்பதால், ஞானேஷ் குமாருக்கு எதி ரான பதவி நீக்க நோட்டீஸ் தோற்கடிக்கப்படுவது உறுதி.

# என்.டி.ஏ. கூட்டணியில் த.வெ.க.? - அ.தி.மு.க. விளக்கம்!

திருச்சி, மார்ச். 12–

திருச்சி பஞ்சப்பூரில் நேற்று தேசிய ஜனநாயக கூட்டணியின் தேர்தல் பிரசார பொதுக்கூட்டம் முடிந்த பின்னர் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி திருச்சி மத்திய பஸ் நிலையம் அருகில் தான் தங்கி இருந்த தனியார் ஓட்டலுக்கு வந்தார்.



அப்போது அவரை மத்திய மந்திரி பியூஷ் கோயல் சந்தித்து பேசினார். சுமார் 45 நிமிடங்களுக்கும் மேலாக இந்த பேச்சுவார்த்தை நீடித்தது. தேர்தலில் தொகுதி பங்கீடு குறித்து அவர்கள் பேசியதாக கூறப்படுகிறது. இந்த பேச்சுவார்த்தைக்கு பின்னர் எடப்பாடி பழனிசாமி நிருபர்களிடம் கூறியதாவது:–

தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி வலுவாக உள்ளது. த.வெ.க. உடன் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம் என்பது கற்பனையான ஒன்று. த.வெ.க.வை கூட்டணியில் சேர்ப்பது பற்றி நாங்கள் (அ.தி.மு.க.) எந்த பேச்சுவார்த்தையும் நடத்தவில்லை. எனக்கு தெரிந்து பா.ஜ.க. தரப்பிலும் யாரும் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை.

அ.தி.மு.க. ஆட்சி பொற்கால ஆட்சியாக இருந்தது. அதனால் எங்கள் மீது விமர்சனம் செய்ய முடியாது. எங்களுடன் மு.க.ஸ்டாலினால் நேரடியாக மோத முடியாது என்பதால் தமிழ்நாட்டிற்கும், டெல்லிக்கும் இடையே தான் போட்டி என்கிறார். அ.தி.மு.க.வின் அடுத்த தேர்தல் அறிக்கை விரைவில் வெளியிடப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# வீட்டு உபயோக சிலிண்டர்களை வணிக ரீதியிலான தேவைகளுக்கு பயன்படுத்தக் கூடாது: தமிழக அரசு!




சென்னை, மார்ச். 12–

வீட்டு உபயோக சிலிண்டர்களை வணிக ரீதியிலான தேவைகளுக்கு பயன்படுத்தக் கூடாது என தமிழக அரசு தெரிவித்துள்ளது. வீட்டு பயன்பாட்டு சிலிண்டரை வணிக ரீதியாக பயன்படுத்தினால் பொதுமக்கள் புகார் அளிக்கலாம். வீட்டு சிலிண்டரை வணிக ரீதியில் பயன்படுத்துவது கண்டறியப்பட்டால் பறிமுதல் செய்யப்படும் என தமிழக அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது. பொதுமக்கள் 044–28592828 என்ற எண்ணிலும், 1967 என்ற உதவி எண்ணிலும் புகாரளிக்கலாம்.

# சமையல் சிலிண்டர் தட்டுப்பாடு ரயில்களில் உணவை நிறுத்த திட்டம்!

புதுடில்லி, மார்ச். 12–

நாடு முழுதும் சமையல் காஸ் சிலிண்டர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், ரயில்களில் வழங்கப்படும் உணவு சேவையை தற்காலிகமாக நிறுத்த, ஐ.ஆர்.சி.டி.சி., எனப்படும் இந்திய ரயில்வே உணவு மற்றும் சுற்றுலா கழகம் பரிசீலித்து வருகிறது.



ரயில்களில் உணவு சேவையை ஐ.ஆர்.சி.டி.சி., நிர்வகித்து வருகிறது.

எரிவாயு பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளதால், ரயில்களில் சமைத்த உணவு வழங்குவதை தற்காலிகமாக நிறுத்த ஐ.ஆர்.சி.டி.சி., பரிசீலித்து வருகிறது.

இது குறித்து ஐ.ஆர்.சி.டி.சி., அதிகாரிகள் கூறியதாவது: ஐ.ஆர்.சி.டி.சி., தினமும் 17 லட்சம் உணவு பொட்டலங்களை ரயில்கள் மற்றும் ரயில் நிலையங்கள் வழியாக வழங்கி வருகிறது. சிலிண்டர் கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டால், மாற்று சமையல் முறைகளை பயன்படுத்த வேண்டும் என கூறப்பட்டுள்ளது. பயணியரின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், உடனடியாக தயாரித்து சாப்பிட கூடிய உணவுப் பொருட்களை போதுமான அளவில் கையிருப்பில் வைத்திருக்க உத்தர விட்டுள்ளோம்.

ரயில் டிக்கெட் உடன் உணவுக்கான கட்டணம் செலுத்தியவர்களுக்கு உணவு வழங்கப்படவில்லை என்றால் கட்டணம் திருப்பி அளிக்கப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

# இரட்டை நிலை.. இரட்டை தொகுதி.. விஜய்யின் புதிய அரசியல் பார்முலா!

சென்னை, மார்ச். 12–



சினிமாவில் ஹீரோக்கள் இரட்டை வேடங்களில் நடிப்பதை பார்த்திருக்கிறோம். ஆனால், சினிமாவில் இருந்து அரசியலுக்கு வந்ததாலோ என்னவோ, இப்போது நடிகர் விஜய்யும் அதுபோன்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

தமிழக அரசியலில் புது வரலான நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம், முதல் முறையாக சட்டசபை தேர்தலை சந்திக்க இருக்கிறது. தேர்தலில் அக்கட்சிக்கு 30 சதவீதத்திற்கு மேல் வாக்குகள் கிடைக்கும் என்று அக்கட்சி நிர்வாகிகள் கூறிக்கொண்டிருந்தாலும், கருத்து கணிப்புகளில் சுமார் 14 சதவீத வாக்குகள் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது.

**பவன் கல்யாண் முயற்சி**

சமீபத்தில், அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணியில் தமிழக வெற்றிக் கழகத்தையும் இணைக்க நடிகர் விஜய்யுடன் ரகசிய பேச்சு வார்த்தை நடந்தாக கூறப்பட்டது. ஆந்திர துணை முதல்–மந்திரியும், நடிகருமான பவன் கல்யாணும் இதற்கான முயற்சியை மேற்கொண்டார் என்று சொல்லப்பட்டது.

தமிழக பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.க. நிர்வாகிகள், அதிகாரப்பூர்வமாக த.வெ.க.வுடன் பேச்சு வார்த்தை எதுவும் நடைபெறவில்லை என்று கூறிவந்தாலும், திரை மறைவில் பா.ஜ.க. நிர்வாகிகள் தொடர் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு வருவதாகவே கூறப்படுகிறது.

**முதல்–அமைச்சர் வேட்பாளர் விஜய்**

இந்த பேச்சு வார்த்தை வெற்றி பெற்றிருந்தால், நேற்று திருச்சியில் நடைபெற்ற தேசிய ஜனநாயக கூட்டணி பொதுக்கூட்டத்திலேயே பிரதமர் நரேந்திரமோடி முன்னிலையில் நடிகர் விஜய்யும் மேடை ஏற்றப்பட்டு இருப்பாராம். ஆனால், இழுபறி நிலை தொடர்ந்ததால், அதற்கான வாய்ப்பு ஏற்படாமல் போய்விட்டதாம்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் நடிகர் விஜய் இணைந்தால், 60 தொகுதிகளும், துணை முதல்–அமைச்சர் பதவியும் வழங்கப்படுவதாக கூறப்பட்டதாம். ஆனால், விஜய் தரப்போ, கட்சி தொடங்கிய போதே, முதல்–அமைச்சர் வேட்பாளர் விஜய் என்று அறிவிக்கப்பட்டுவிட்டது. அதனால், முதல் 2½ ஆண்டுகள் விஜய் முதல்–அமைச்சராக இருப்பார், அடுத்த 2½ ஆண்டுகள் எடப்பாடி பழனிசாமி முதல்–அமைச்சராக இருக்கட்டும் என்று சொல்லிவிட்டதாம்.

**எடப்பாடி பழனிசாமி அதிர்ச்சி**

இதனால், பா.ஜ.க. அதிர்ந்து போனதைவிட, அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிதான் கூடுதலாக அதிர்ந்து போனாராம். தமிழக வெற்றிக் கழகத்தின் 'டிமாண்ட்' முதல்–அமைச்சர் பதவியாக இருந்தால், கூட்டணி பேச்சு வார்த்தையே வேண்டாம் என எடப்பாடி பழனிசாமி கூறுகிறாராம். இப்படி, ஒரு பக்கம் கூட்டணி பேச்சு வார்த்தையை நடிகர் விஜய் நடத்திக் கொண்டிருந்தாலும், மற்றொரு பக்கம் வேட்பாளர் தேர்வையும் தொடங்கிவிட்டார். முதற்கட்டமாக 60 தொகுதிகளுக்கான த.வெ.க. வேட்பாளர்களையும் அவர் தேர்வு செய்துவிட்டார்.

**இரட்டை தொகுதியில் போட்டி**

தனித்து போட்டியிடும் சூழ்நிலை ஏற்பட்டால், தான் இரட்டை தொகுதிகளில் களம் இறங்கவும் விஜய் முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. காரணம், ஆளுங்கட்சியான தி.மு.க. தரப்பு, எப்படியும் விஜய்க்கு எதிராக வலுவான வேட்பாளரையே களம் இறக்கும் என்று த.வெ.க.வினரே கூறிவருகிறார்கள்.

பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய 2 தொகுதிகளில் நடிகர் விஜய் போட்டியிட வாய்ப்பு இருப்பதாக சொல்லப்படுகிறது. இரு தொகுதிகளிலுமே கிறிஸ்தவர்கள் வாக்கு அதிகம் என்பதால், அது தனது வெற்றிக்கு உதவும் என்று அவர் நம்புகிறாராம்.

**அரசியலில் புது பார்முலா**

மொத்தத்தில், கூட்டணி அமைத்து தேர்தலில் போட்டியா? அல்லது தனித்து போட்டியா? என்பதை இன்னும் முடிவு செய்யாமல் இரட்டை நிலையில் விஜய் இருந்து வருகிறார். அதே நேரத்தில், தனித்து போட்டியிடும் நிலை ஏற்பட்டால், இரட்டை தொகுதியிலும் அவர் போட்டியிட முடிவு செய்திருப்பது, அரசியலில் புது பார்முலாவாக பார்க்கப்படுகிறது.


# கியாஸ் தட்டுப்பாடு: ஐடி நிறுவன உணவங்களுக்கும் பாதிப்பு!




சென்னை, மார்ச். 12–

கியாஸ் தட்டுப்பாடு காரணமாக தோசை, ஆம்லேட் உள்ளிட்ட உணவுகள் வழங்கப்படாது என Infosys நிறுவனம் அறிவித்துள்ளது. குறிப்பிட்ட சில வகை உணவுகள் மட்டுமே கிடைக்கும் என சென்னை, புனே, பெங்களூரு ஆகிய இடங்களில் உள்ள நிறுவன ஊழியர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சட்டென சரிந்த தங்கம் விலை!



சென்னை, மார்ச். 12–

தங்கம் விலை இன்று குறைந்துள்ளது. சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1200 குறைந்து ரூ.1,19,760–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.150 குறைந்து ரூ.14,970–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலை ஒரு கிராமுக்கு ரூ. 10 குறைந்து, ஒரு கிராம் வெள்ளி ரூ.290–க்கும், ஒரு கிலோ வெள்ளி 2.90 லட்சத்துக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# தேசியக் கொடியை அவமதித்ததாக ஹர்திக் பாண்ட்யா மீது வழக்குப்பதிவு!



டெல்லி , மார்ச், 12–

டி20 WC வெற்றி கொண்டாட்டத்தின்போது, தேசியக் கொடியை அவமதித்தாக இந்திய வீரர் ஹர்திக் பாண்ட்யா மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. புனேவைச் சேர்ந்த வஜித் கான் என்ற வழக்கறிஞரின் புகாரின் அடிப்படையில் வழக்குப் பதிவாகி உள்ளது. கொண்டாட்டத்தின்போது தேசியக் கொடியை அணிந்தபடி, காதலி மஹிகா ஷர்மாவுடன் கீழே படுத்திருந்ததால் அவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி புகார் அளிக்கப்பட்டிருந்தது.

# தமிழ்நாட்டில் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு இல்லை!

சென்னை, மார்ச். 12–




தமிழ்நாட்டில் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு இல்லை என பெட்ரோல் பங்க் உரிமையாளர்கள் சங்க தலைவர் முரளி தெரிவித்துள்ளார். தமிழ்நாடு முழுவதும் எண்ணெய் நிறுவனங்களால் தேவையான அளவுக்கு பெட்ரோல், டீசல் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு என்பது வதந்தி; வாகன ஓட்டிகள் நம்ப வேண்டாம். வாகனங்களில் பெட்ரோல், டீசல் போட்டாலே போதும். கேன்களில் பெட்ரோல், டீசல் வாங்கிச் செல்வது தேவையில்லாதது. சென்னை முதல் குமரி வரை எந்த பெட்ரோல் பங்க்குக்கு போனாலும் பெட்ரோல், டீசல் போட்டுக் கொள்ளலாம் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் அடுத்ததாக பெட்ரோல், டீசலுக்கு தட்டுப்பாடு வரும் என நினைத்து மக்கள் அச்சப்பட வேண்டாம். சமையல் சிலிண்டர்களுக்குத்தான் தட்டுப்பாடு உள்ளது; பெட்ரோல், டீசலுக்கு தட்டுப்பாடு இல்லை. 7,000 பெட்ரோல் பங்க்குகளில் 21 நாட்களுக்கு எரிபொருள் கையிருப்பில் உள்ளது. வாகன ஓட்டிகள் அதிக அளவில் பெட்ரோல், டீசலை நிரப்பி செயற்கையாக தட்டுப்பாட்டை உருவாக்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார்.




| MATCH NO | DATE | DAY | TIME | HOME | AWAY | VENUE |
|---|---|---|---|---|---|---|
| 1 | 28/03/26 | Sat | 7:30 PM | Royal Challengers Bengaluru | Sunrisers Hyderabad | Bengaluru |
| 2 | 29/03/26 | Sun | 7:30 PM | Mumbai Indians | Kolkata Knight Riders | Mumbai |
| 3 | 30/03/26 | Mon | 7:30 PM | Rajasthan Royals | Chennai Super Kings | Guwahati |
| 4 | 31/03/26 | Tue | 7:30 PM | Punjab Kings | Gujarat Titans | New Chandigarh |
| 5 | 01/04/26 | Wed | 7:30 PM | Lucknow Super Giants | Delhi Capitals | Lucknow |
| 6 | 02/04/26 | Thu | 7:30 PM | Kolkata Knight Riders | Sunrisers Hyderabad | Kolkata |
| 7 | 03/04/26 | Fri | 7:30 PM | Chennai Super Kings | Punjab Kings | Chennai |
| 8 | 04/04/26 | Sat | 3:30 PM | Delhi Capitals | Mumbai Indians | Delhi |
| 9 | 04/04/26 | Sat | 7:30 PM | Gujarat Titans | Rajasthan Royals | Ahmedabad |
| 10 | 05/04/26 | Sun | 3:30 PM | Sunrisers Hyderabad | Lucknow Super Giants | Hyderabad |
| 11 | 05/04/26 | Sun | 7:30 PM | Royal Challengers Bengaluru | Chennai Super Kings | Bengaluru |
| 12 | 06/04/26 | Mon | 7:30 PM | Kolkata Knight Riders | Punjab Kings | Kolkata |
| 13 | 07/04/26 | Tue | 7:30 PM | Rajasthan Royals | Mumbai Indians | Guwahati |
| 14 | 08/04/26 | Wed | 7:30 PM | Delhi Capitals | Gujarat Titans | Delhi |
| 15 | 09/04/26 | Thu | 7:30 PM | Kolkata Knight Riders | Lucknow Super Giants | Kolkata |
| 16 | 10/04/26 | Fri | 7:30 PM | Rajasthan Royals | Royal Challengers Bengaluru | Guwahati |
| 17 | 11/04/26 | Sat | 3:30 PM | Punjab Kings | Sunrisers Hyderabad | New Chandigarh |
| 18 | 11/04/26 | Sat | 7:30 PM | Chennai Super Kings | Delhi Capitals | Chennai |
| 19 | 12/04/26 | Sun | 3:30 PM | Lucknow Super Giants | Gujarat Titans | Lucknow |
| 20 | 12/04/26 | Sun | 7:30 PM | Mumbai Indians | Royal Challengers Bengaluru | Mumbai |


Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020